29th April 1959]

Houses for Harijans in Dindigul taluk

* 252 *Q.*—SRI M. A. B. ARUMUGHASAMY : Will the Hon. the Minister for Works be pleased to state the number of houses constructed for Harijans in the Dindigul taluk, Madurai district, village-war in the 1957–58?

THE HON. SRI P. KAKKAN : Thirty houses are under construction at Pudur, hamlet of Vangamanuthu and ten houses have been built at Kattupatti, hamlet of Kambilanpatti.

SRI M. A. B. ARUMUGHASAMY : ஆத்தூர் பகுதியில் சின்னப்பட்டி கிராமத்தில் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளில் குடியிருக்க வசதி இல்லாமல் இருக்கிறது என்று ஏதாவது புகார்கள் வந்திருக்கின்றனவா ? அப்படியென்றால் அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI P. KAKKAN : இதற்குத் தனி கேள்வி போட வேண்டும்.

SRI T. VELUCHAMI : நெல்லை ஜில்லாவில் மாராந்தைபுரம் என்ற இடத்தில் ஹரிஜனங்களுக்கு கட்டிக் கொடுத்த வீடுகளில் ஜன்னல்கள் போடாமல் இருக்கிறது. ஹரிஜனங்களுக்குக் கட்டிக் கொடுக்கப்படும் வீடுகளில் ஜன்னல்கள் வேண்டாம் என்பதுதான சர்க்காருடைய எண்ணமா என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : இதற்கும் இப்போதுள்ள கேள்விக்கும் சம்பந்தமில்லையே.

THE HON. SRI P. KAKKAN : இதற்குத் தனி கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. Minister be pleased to state whether any rent is collected from these Harijans for the houses?

THE HON. SRI P. KAKKAN : Yes, we are collecting a small amount of Rs. 2–8–0.

MR. SPEAKER : Next question.

THE HON. SRI P. KAKKAN : I want to correct my answer to the last supplementary question. We are collecting Rs. 2–8–0 per month towards the loan granted to the Harijans.

Housing Scheme for the Harijans of the Ayyampalayam village

* 253 *Q.*—SRI M. A. B. ARUMUGHASAMY : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the present stage of the Harijans Housing Scheme for the Ayyampalayam village, Dindigul taluk; and

(*b*) when it will be executed?

[29th April 1959

THE HON. SRI P. KAKKAN : (a) & (b) Lands have been acquired for the provision of house sites to 42 Harijans in Ayyampalayam village. The question of construction of houses in the village will be considered in 1959–60.

SRI M. A. B. ARUMUGHASAMY : இப்போது கட்டப்படும் வீடுகளை எல்லாம் சேர்த்து ஹரிஜன காலனியாகப் பாவிக்கப்படுமா ? அப்படி என்றால், ஹரிஜன காலனிகளுக்குக் கொடுக்கப்படும் எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : இப்போது 42 பேர்களுக்கு வீடு கட்டுவதற்கு வேண்டிய வீட்டு மனைகள் வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மனைகள் வாங்கி வீடுகள் கட்டின பின்னால் இதைப் பற்றி ஆலோசனை செய்யலாம்.

Panchayats Unions in Development Blocks

*254 Q.—SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

தீவிர சமுதாயத் திட்டம் முடியப்போகும் இடங்களில் பஞ்சாயத்து யூனியன் சபை ஆரம்பிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Yes, Sir, but the selection of development blocks for the constitution of Panchayat Unions under the Madras Panchayats Act, 1958 has not yet been finalised.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : இப்பொழுது பிளாக் ஏரியாக்களிலே பஞ்சாயத்து யூனியன் ஏற்படுத்துவதாக அரசாங்கத்தினிடத்தில் திட்டம் இருக்கிறதாக அறிகிறேன். பிளாக் இல்லாத ஏரியாக்களுக்கு யூனியனும் இல்லை ; பிளாக்கும் இல்லை. அங்கேயுள்ள மற்ற எல்லா அபிவிருத்திகளுக்கும் தடையாக இருப்பதால், அதற்கு அரசாங்கம் இப்பொழுது அந்தப் பகுதியிலே வேலை செய்வதற்கு ஏதாவது முயற்சி எடுத்திருக்கிறதா? இல்லையென்றால், அந்தப் பகுதிகள் திட்டத்தினால் ஏற்பட வேண்டிய பலனை அடைவதற்கு என்ன வழி வகை செய்திருக்கிறார்கள் ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : பிளாக் இல்லாத இடங்களில் பிளாக்குகள் அமைப்பதற்கு திட்டம் இருக்கிறது. அதற்காக வேண்டிய வேலைகள் இப்பொழுது நடந்துகொண்டுதான் வருகின்றது. 1961-ம் ஆண்டு அக்டோபர் 2-ந் தேதிக்குள் இது முடிவு பெறும் என்று எதிர்பார்க்கிறேன்.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : இந்த பிளாக், பஞ்சாயத்து யூனியன் அமையக்கூடிய இடங்களைத் தவிர, சமுதாய நலத் திட்டங்கள் இருக்கும் இடங்களில் பஞ்சாயத்து போர்டுகள் ஒரு சில இடத்தில் தொடர்ந்து அமைக்க முடியாமல் இருப்பதைக் கூடிய சீக்கிரம் அமைப்பதற்கு உத்திர விடுவார்களா ? அப்படி அமைக்கும் வரையில் அந்த பிளாக்குக்கு அதிகத் தொகை ஒதுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இப்பொழுது பிளாக்குகள் ஏற்படுத்தியிருக்கும் இடங்களில் அபிவிருத்தி வேலைகள் நடந்து வருகின்றன. பிளாக் ஏற்படுத்தினால்தான் அந்த வேலைகள் அங்கு நடைபெறுவதற்குள்ள வசதி ஏற்படும். ஆகையால் பிளாக்குகள் துரிதமாக அமைந்து வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கிறேன்.